# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.40/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.21

(Accused present)

| | | | |
|---|---|---|---|
| Name | : மருத்துவர் திரு.வெங்கடேச பிரசன்னா | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 20th day of February, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் மூத்த உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். கடந்த 08.11.2021ம் தேதியன்று அதே துறையில் அதே பணியில் இருந்தபோது, எம்.புதுப்பட்டி காவல்நிலைய குற்ற எண்.166/2021 என்ற வழக்கில் திருத்தங்கல் அனைத்து மகளிர் காவல்நிலைய காவல் ஆய்வாளர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட நகலின் அடிப்படையில் இறந்த நபரான செல்வகணேஷ் த/ பெ முருகன் என்பவரின் பிரேதத்தை எம்.புதுப்பட்டியை சேர்ந்த காவலர் 3804 வினோத் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டு பிரேத பரிசோதனை கடிதத்தை என்னிடம் சமர்பித்தார். பிரேத பரிசோதனையை 08.11.2021ம் தேதியன்று மாலை 04.00 மணிக்கு துவங்கியது.

பிரேதத்தின் உடம்பில் தீக்காயங்கள் இருந்ததால் அங்க மச்ச அடையாளங்களை சரியாக பார்க்க முடியவில்லை. இறந்த நபர் சாம்பல் நிற

பனியன், வெள்ளை நிற சட்டை, கருப்பு உள்ளாடை மற்றும் கருப்பு வேட்டி அணிந்திருந்தார்.

<u>பிரேதத்தின் வெளிப்புற தோற்றம்</u>

1.உடம்பில் கால் பகுதிகள் இரண்டும் ஆழமான தீக்காயங்களால் பாதிக்கப்பட்டிருந்தன.,

2.உடம்பின் இரு கைகளும், கழுத்து பகுதியும், முகமும் மேலோட்டமான தீக்காயங்களால் பாதிக்கப்பட்டிருந்தன.

3.ஆண்குறியும் அதை சுற்றியுள்ள பகுதிகளிலும் ஆழமான தீக்காயங்களால் பாதிக்கப்பட்டிருந்தன.

4. மண்டை மேல் தோளில் உள்ள முடிகள் எறிந்தும், பொசுங்கியும் காணப்பட்டது.

5.கை விரல்கள், கால் விரல்களல் இவை அனைத்திலும் உள்ள நகக்கன்றுகள் நீல நிறமாக காணப்பட்டது.

6.இடுப்பிற்கு கீழே உள்ள முட்டிப்பகுதி மற்றும் கணுக்கால் பகுதியில் வெப்பத்தினால் ஏற்பட்ட விறைப்பு தன்மை காணப்பட்டது.

மேலே குறிப்பிட்டுள்ள தீக்காயங்கள் அனைத்தும் இறப்பிற்கு பின்னதாக ஏற்பட்டவை.

<u>வெளிப்புறக்காயங்கள்</u>

1.இடது கண்புருவத்தில் 3 x 0.5 x 0.25 cm அளவிலான ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

2.இடது கண்புருவத்தில் 3 x 0.5 x 0.25 cm அளவிலான மற்றொரு வெட்டுக்காயம் காணப்பட்டது. அந்த வெட்டுக்காயத்தின் அடிப்பகுதியில் உள்ள எலும்பு நொருங்கியும் காணப்பட்டது.

3.இடது பக்க முகத்தில் 1 x 0.25 x 0.25 cm அளவிலான வெட்டுக்காயம் கண் புருவத்திற்கு அருகாமையில் காணப்பட்டது.

4.இடது பக்க கன்னத்தில் 3 x 0.5 x 0.25 cm அளவிலான வெட்டுக்காயம் ஒன்று காணப்பட்டது.

5.மூக்கு பகுதியில் 3 x 0.5 x 0.25 cm அளவிலான வெட்டுக்காயம் காணப்பட்டு, அதன் அடியில் உள்ள மூக்கின் எலும்புகள் உடைந்து காணப்பட்டது.

6.இடது பக்க மேல்உதட்டில் 1 x 0.5 x 0.5 cm அளவிலான வெட்டுக்காயம் ஒன்று காணப்பட்டது.

7.கீழ்தாடையில் உள்ள எலும்புகள் வலது மற்றும் இடது இரண்டு எலும்புகளும் உடைந்து காணப்பட்டது.

8.தலையின் வலது பக்க பின்பகுதியில் 3 x 0.5 x 0.25 cm அளவிலான வெட்டுக்காயம் ஒன்று காணப்பட்டது.

9.பின் தலையின் நடுப்பகுதியில் 2 x 0.5 x 0.25 cm அளவிலான வெட்டுக்காயம் ஒன்று காணப்பட்டது.

மேலே குறிப்பிட்டுள்ள வெளிப்புறக்காயங்கள் அனைத்தும் சிவப்பு நிறம் கொண்டதாக காணப்பட்டது.

<u>உடல் உட்கூறாய்வு</u>

<u>1)தலைப்பகுதி –</u>

1.மண்டையின் மேல் தோலின் அடிப்பகுதியில் 2 x 0.25 x 0.25 cm அளவிலான கன்றிய காயம் தலையின் வலது பக்க பின்பகுதியில் காணப்பட்டது. இந்த காயமானது வெளிப்புற காயத்தில் குறிப்பிட்டுள்ள காயம் எண்.8 ற்கு சம்மந்தப்பட்டது.

2.மண்டையின் மேல் தோலின் அடிப்பகுதியில் இடதுபக்க தலையின் 4 x 0.25 x 0.25 cm அளவிலான கன்றிய காயம் காணப்பட்டது.

3.மண்டை ஓடு மற்றும் மூளை உறை சாதாரண நி<u>பிரேதத்தின் வெளிப்புற தோற்றம்</u>லையில் இருந்தது.

4.மூளை முழுவதுமாக ரத்தம் கசிந்து காணப்பட்டது.

5.மண்டை ஓட்டின் அடிப்பகுதி சாதாரண நிலையில் இருந்தது.

<u>2)கழுத்துப்பகுதி –</u>

1.கழுத்தில் உள்ள சதைகளில் கன்றிய காயம் காணப்பட்டு மற்றும் அந்த சதைப்பகுதிகள் வெந்தும் காணப்பட்டது.

2.நாவடி எலும்பின் இடது பக்கத்தில் நொருங்கியும் உடைந்தும் அதை சுற்றியுள்ள சதைப்பகுதிகள் கன்றியும் காணப்பட்டது.

3)மார்பு பகுதி–

1.மார்புகண்ட எலும்புகள் சாதாரண நிலையில் இருந்தன.

2.நுரையீரல், இருதயம் மற்றும் அதன் ரத்த நாளங்கள் சாதாரண நிலையில் இருந்தன.

4)வயிற்றுப்பகுதி –

1.இரைப்பையில் 100 கிராம் அளவிலான பச்சை நிறம் கொண்ட செரிமானம் ஆகாத அரிசி உணவுகள் எவ்வித வாசனையும் இன்றி காணப்பட்டது.

2. கல்லீரல் மற்றும் மண்ணீரல் சாதாரண நிலையில் இருந்தன.

3.வலது பக்க சிறுநீரகம் வெப்பத்தினால் வெந்து காணப்பட்டது.

4. இடது பக்க சிறுநீரகம் சாதாரண நிலையில் இருந்தன.

5.சிறுநீரகப்பையில் 100 மில்லி அளவிலான சிறுநீர் காணப்பட்டது.

6.முதுகுதண்டில் சி 5, சி6, சி7 ஆகிய 3 தண்டுவட எலும்புகளிலும் கன்றிய காயங்கள் காணப்பட்டது.

மேலே குறிப்பிட்டுள்ள உட்புறக்காயங்கள் மற்றும் வெளிப்புற காயங்கள் அனைத்தும் இறப்பிற்கு முன்னதாக ஏற்பட்டவை. வெளித்தோற்றத்தில் குறிப்பிட்டுள்ள தீக்காயங்கள் மட்டும் இறப்பிற்கு பின்னராக ஏற்பட்டவை.

பிணக்கூறாய்வு 08.11.2021ம் தேதி மாலை 4.45 மணிக்கு நிறைவடைந்தது.

உடல் உள்ளுறுப்புகள் ரசாயண பகுப்பாய்விற்காக ராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டது. இறந்த நபர் கழுத்துப்பகுதி, தலை மற்றும் முகம் இவை அனைத்திலும் ஏற்பட்ட காயங்கள் மற்றும் அதன் விளைவுகளால் இறந்திருக்கக்கூடும் என்று இறுதி கருத்துரை வழங்கினேன்.

நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.8, இந்த வழக்கில் நான் இறுதி கருத்துரை வழங்குவதற்காக பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட ராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து பெறப்பட்ட உயிரியல் அறிக்கை அ.சா.ஆ.9, விஸ்ரா அறிக்கை அ.சா.ஆ.10 ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை

வெட்டுக்காயம் என்பது மருத்துவ மொழியில் Incised Wound என்று குறிப்பிடப்படும் என்றால் காயத்தை ஏற்படுத்தும் ஆயுதத்தை பொறுத்து சிறிய கூர்மையான கனம் குறைவான ஆயுதங்களால் ஏற்படுத்தக்கூடும் என்றால் அவை Incised Wound என்றும், கனம் பொருந்திய கூர்மையான ஆயுதத்தால் ஏற்படுத்தக்கூடும் என்றால் Chop Wound /Slash Wound என்றும் குறிப்பிடுவோம். இந்தவழக்கில் தாக்குவதற்கு பயன்படுத்தியதாக கூறப்படும் ஆயுதம் எதையும் ஆய்வாளர் என்னிடம் காட்டி இறுதி கருத்துரை பெறவில்லை என்றால் சரிதான். பிரேத்தில் பிரேத பரிசோதனையின் போது காணப்பட்ட உடைகள் எறிந்த நிலையில் இருந்ததாக பிரேத பரிசோதனை அறிக்கையில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கிழிந்த காயம் என்பது மழுங்கிய ஆயுதங்களால் ஏற்படுத்தக்கூடும் என்றால் சரிதான். மழுங்கிய ஆயுதங்கள் என்பது உருட்டுக்கட்டை, இரும்பு ராடு, கல், செங்கல் போன்றவை என்றால் சரிதான்.

மறுவிசாரணை – இல்லை.